செய்தி வெளியீடு எண்: 628 நாள்:24.09.2019

<u>செய்தி வெளியீடு</u>

## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொண்ட தொடர் முயற்சியால் பெறப்பட்ட பாரத் நெட் திட்டத்தின் மூலம் ரூ.1815.31கோடி மதிப்பீட்டில் தமிழகத்தில் உள்ள 12524 கிராம பஞ்சாயத்துகளுக்கு இணைய வசதி– மாண்புமிகு வருவாய் & பேரிடர் மேலாண்மை துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

## மாண்புமிகு R.B .உதயகுமார் அவர்கள் தகவல்

சென்னை, அண்ணாசாலையில் உள்ள P.T.Lee.செங்கல்வராயன் நாயக்கர் கட்டிடத்தில், தமிழ்நாடு பைபர்நெட் நிறுவனத்திற்கான அலுவலகத்தில் மாண்புமிகு வருவாய் & பேரிடர் மேலாண்மை துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மாண்புமிகு R.B.உதயகுமார் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு கூட்டம் இன்று (24.09.2019) நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 14.07.2017 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் அறிவித்த கனவு திட்டமான கிராமங்களுக்கு இணைய வசதி வழங்கும் திட்டத்தினை அறிவித்தார்.

இத்திட்டத்தினை விரைவாக செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் முயற்சியின் காரணமாக பாரத் நெட் திட்டத்தினை ரூ.1815.31/– கோடி செலவில் தமிழகத்தில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினை விரைவாக செயல்படுத்த ஒப்புதல் பெற்று தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டம் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளும் கண்ணாடி இழை கட்டமைப்பு (Optic Fibre Infrastructure) மூலம் இணைக்கப்படவுள்ளது. இதன் மூலம், அனைத்து கிராமங்களுக்கும் 1Gbps

அளவிற்கு குறையாமல் இணைய வசதி வழங்கப்படும்.இத்துடன் ரூ.500 கோடி உத்தேச செலவிலான தமிழக அரசின் தமிழ்நெட் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகர பஞ்சாயத்துகள் ஆகியவை இணைக்கப்படும்.

மத்திய அரசின் பாரத்நெட் மற்றும் மாநில அரசின் தமிழ்நெட் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் ஒருங்கணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு (Integrated Digital Infrastructure) உருவாக்கப்படும். இதன் மூலம் இணையதள வசதி மட்டுமல்லாமல் மின்னாளுமை திட்டங்கள், புதிய தொழில்நுட்பங்கள் (செயற்கை நுண்ணறிவு உள்ளிட்டவை) செயல்படுத்துதல் சாத்தியமாகும். இத்திட்டம் அடுத்த 18 மாதங்களுக்குள் முழுமையாக நிறைவேற்றப்படும்.

இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்ப துறை முதன்மை செயலாளர் டாக்டர்.சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னாளுமை முகமை ஆணையர் திரு.சந்தோஷ் K.மிஷ்ரா, இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**